# ஆதிசக்தி விளையாட்டுக் கழகம்

பேட்டி கண்டவர் - தங்கராசா கந்தசாமித்துரை
(சேட்டுத்தங்கராசாவின் மகள் அருள்)
பேட்டி கொடுத்தவர்கள்

1. சரவணமுத்து மகன் தர்மலிங்கம்
2. பொன்னுத்துரை தனபாலசிங்கம்

பேட்டி கொடுத்தவர்கள் இருவரும் மூப்பெய்தியுள்ளதால் ஞாபக சக்தி குறைவாக காணப்படுகின்றனர். இருந்தபோதும் அவர்களின் பொதுவான கருத்துக்கள் கீழ் வருமாறு

1. இக் கழகம் முறைப்படி நிர்வாகசபை ஒன்று இல்லாமலே தோற்றம் பெற்றது.
2. பொதுவாக ஆதிகோவிலடியில் எந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டாலும் **"ஆதி சக்தி**" என்ற பெயரிலேயே அதாவது ஆதி வைரவரை முன்நிறுத்தி ஆரம்பிப்பது வழமை. அது போலவே இக் கழகமும் தன் பெயரைப் பெற்றது.
3. முதலில் இல்ல விளையாட்டுப்போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலே குறிப்பிட்ட திருவாளர்கள் பொ.தனபாலசிங்கம் மற்றும் ச.தர்மலிங்கம் ஆகியோரே காரணகர்த்தர்களாக விளங்கினார்களாம்.
4. இவர்கள் இருவரும் வல்லை சிதம்பரக்கல்லூரியில் S.S.C (தற்போதைய G.G.E (O/L) படித்து முடித்த காலப்பகுதியில் 1955 ம் ஆண்டு இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

திரு பொ. தனபாலசிங்கம் பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டவராக இருந்திருக்கிறார். இதற்கு ஊக்கியாக செயற்பட்டவர் வல்வை மதவடியை சேர்ந்தவரும் சிதம்பரக்கல்லூரியில் P.T மாஸ்டராக செயற்பட்டவருமான திரு. தியாகராஜா அவர்கள் திரு. தனபாலசிங்கம் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் நீளம்பாய்தலில் மற்றும் குண்டெறிதல் போன்ற விளையாட்டுக்களில் சாதனை படைத்துள்ளார். திரு. தர்மலிங்கம் விளையாட்டுகளில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லையாம். ஆனால் இறைவழிபாட்டிலும் தேவாரதிருவாசகங்கள் பாடுவதிலும் ஆர்வம் காட்டியுள்ளார்.

இக்காலத்தில் பாடசாலைகளில் ஆங்கில மூலக்கல்வியே (English medium) உயர்தர வகுப்புக்களில் நிலவியது. எமது அறிவிற்கும் ஆய்வுக்கும் எட்டிய வரையில் ஆதிகோவிலடியிலிருந்து உயர்கல்வியை மேற்கொண்டவர்களுள் முதன்மை வகித்தவர் காலஞ்சென்றவரும் சிவலை முருகரின் பூட்டனுமாகிய திரு கந்தசாமி தங்கராசா ஆவார். இவர் 1937 ல் பிறந்தவர். அடுத்து கல்வியில் முன்னோடிகளாக இருந்தவர்களான சரவணமுத்து சம்மாட்டியாரின் மகன் தர்மலிங்கம், பொன்னுத்துரையின் மகன் தனபாலசிங்கம் ஆகியோரே இக்கழகத்தை ஆரம்பித்தனர். இம் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தவர்கள் ஆதிகோவிலடியில் வாழ்ந்த ஏனைய இளைஞர்களும் இவர்களது சமகால வயதுடைய அனைவரும் ஆவர் என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும். திரு.பொ.தனபாலசிங்கம் உயர்கல்விக்காக இந்தியாவுக்கு பலாலியிலிருந்து திருச்சிக்கு ரூ 75/= செலுத்தி விமானத்தில் போனதாகவும் ஆனால் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக்காலமாக இருந்ததால் இந்தியாவுக்கு பணம் கொண்டு செல்வதில் இருந்த தடங்கல்களும் (அன்னியச் செலாவணி) இந்திய விசா எடுப்பதில் இருந்த பிரச்சனைகளும் இந்திய படிப்பை கைவிட வேண்டிய நிலையை உருவாக்கியது. இதனால் இந்தியக்கல்வியை தொடர முடியாமல் ஆதிகோவிலடிப் பிள்ளைகளுக்கு இலவசமாக பாடம் சொல்லிக் கொடுத்து அவர்களை கல்வியில் முன்னேற்ற எண்ணிய திரு. பொ. தனபாலசிங்கம் அவ் வண்ணமே செயலிலும் ஈடுபட்டார்.

இவரிடம் கல்விகற்ற மாணவர்களை விளையாட்டிலும் ஈடுபடுத்த விரும்பிய இவர் இப்பிள்ளைகளை முக்கிய பங்காளிகளாக கொண்டு முதலாவது விளையாட்டுப் போட்டியை நடாத்த முனைந்தனர். இதில் பாடம் படிக்காத சிறுவர்களும், பள்ளிக்கு செல்லாத சிறுவர்களும் என பலர் பங்கு கொண்டதாக கூறினர் திரு பொ.தனபாலசிங்கம்.

**இக்கழகம் 1955களில் ஆரம்பிக்கப்பட்டதாக ஊகிக்கலாம்.**

பேட்டி தந்தவர் - தம்பிராசா

நவகுலராசா (நவம்)

இவரது பிறந்த திகதி 19.10.1964

இவரைப்பற்றிய சில குறிப்புக்கள்

வருமாறு

படித்த பாடசாலை - ஆரம்பக்கல்வி - சிவகுரு வித்தியாசாலையிலும்(G.C.E O/L ) ஜ 1979 ல் யா/சிதம்பரக் கல்லூரியிலும் படித்தார். விளையாட்டில் ஈடுபாடுகள் - நீளம் பாய்தல், 200 மீற்றர் மற்றும் 400 மீற்றர் ஓட்டம், உதைபந்தாட்டம் (இவற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் புரிந்து எமது ஊருக்கு பெருமை தேடித்தந்துள்ளார்.

மேற்படி பேட்டியாளர் தனது நினைவுகள் மற்றும் ஆற்றல்களைப் பயன்படுத்தி பின்வரும் தகவல்களை தருகிறார். இத் தகவல்களை பல மூத்தவர்களிடமும் கேட்டு அறிந்ததாக குறிப்பிட்டார். விளையாட்டுக் கழகத்தை ஆரம்பித்தவர்கள் ஏறக்குறைய 1960 கள் வரை தொடர்ந்து இல்ல விளையாட்டுக்களை நடாத்தியதுடன் பல வெளிக்களப் போட்டிகளை அதாவது பொது மக்கள் பலரும் மற்றும் பிற விளையாட்டுக்கழகங்களும் கலந்து கொள்ளக்கூடிய பின்வரும் விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்தியுள்ளனர்.

கயிறிழுத்தல், காலால் தேங்காய் உரித்தல், கம்பிமுறித்தல், பாய்மரம் ஏறுதல் (கீறிஸ் கம்பம் ஏறுதல் அல்ல) போன்றனவாகும். இக்காலப்பகுதியின் பின்னர் 1970 கள் வரை இவ் விளையாட்டுக் கழகம் ஒரு நிர்வாக கட்டமைப்புக்குள் இருந்தபோதும் ஆண்டு தோறும் நடைபெறும் போட்டிக்காலங்களிலே ஒன்று கூடி நடாத்தியுள்ளனர். முதியவர்கள் இறந்தமை, போர்ச்சூழல் முதலியவற்றால் சரியான தகவல்களைப் பெறமுடியவில்லை.

இதன்பின்னர் அக்காலத்து இளைஞர்கள் இவ்வமைப்பை புனரமைப்புச் செய்து பல புதிய விளையாட்டுக்களை நடாத்தி மேலும் பல வேறு விளையாட்டுகளையும் பொது விளையாட்டு வீரர்களையும் பங்கு பெறச் செய்து ஒரு புத்தூக்கத்தை கொடுத்தனர். இவர்களை இவ்வாறு ஊக்கப்படுத்துவதற்கும் பிற இடங்களில் நடந்த போட்டிகளில் பங்குகொள்ளுதற்கும் உற்சாகமளித்தவர்கள் எமது ஊரின் மூத்த விளையாட்டு வீரர்களாக திகழ்ந்து எமக்கு பெருமை தேடித்தந்தவர்களாவார். இவர்களுள் சிலரை குறிப்பிடுகின்றோம். (பல பெயர்கள் தவறுதலாக விடப்பட்டிருக்கும்)

திரு.கி.நாகராசா (திரு.தேவசிகாமணி முன்னாள் விளையாட்டு கழக தலைவரின் தந்தை)

திரு.அ.இராசரத்தினம் (பிரபல விளையாட்டு வீரர், அமரர் இராஜகோபாலின் தந்தை)

திரு.சு. அழகராசா (தங்கவடிவேல் சண்முகத்தின் தந்தை)
திரு.கி. தம்பிராசா (உதைபந்தாட்டவீரர் திரு.பரமானந்தராஜா - பரம் மற்றும் நவம் ஆகியோரின் தந்தை)
திரு.பொ. தியாகராசா (U.K யிலுள்ள திரு. சிவகுமாரின் தந்தை)
திரு.சி.தியாகராசா (திரு.இராமச்சந்திரன் விளையாட்டு வீரரின் தந்தை)
திரு.தில்லையம்பலம் (சிறந்த உதைபந்தாட்ட வீரர் (பொலிஸ்) இன் தந்தை
திரு.ம.துரைசிங்கம் (திரு.நா. மயோன்ராசாவின் சிறிய தந்தை)
திரு.இ.முத்துலிங்கம் (திரு.பத்மநாதன் (சாந்தன்) இன் தந்தை
மு. சிவப்பிரகாசம் (உதைப்பந்தாட்டவீரன் சூரியகுமார் (தம்பிக்குட்டியின் தந்தை)
திரு. அ. சித்திரைவேல் (அண்ணாவியார்)
திரு.சி.தில்லையம்பலம் (திரு.ஜெயராஜ்) அவர்களின் தந்தை
திரு.ஐ.அன்னராசா (சின்னவி அப்பா (அமரர்) - துறைச்செல்வம் ஐயாப்பிள்ளையின் தந்தை )
திரு.ஐ.முத்துக்குமாரு (திரு.ஞானரத்தினம் (மணியின் (முன்னாள் ஆதிவைரவர் தேவஸ்தான தலைவர்) தந்தை)

இவர்கள் 1935-1940 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்தவர்கள் எனக் கருதப்படலாம். இவர்களைத் தொடர்ந்து பின் வரும் குழுவினர் எமது விளையாட்டு கழக வீரர்களாக திகழ்ந்ததுடன், போட்டிகளை நடாத்தியும் பிறவிளையாட்டுக்கழகங்களின் போட்டியில் பங்கு கொண்டு பல சாதனைகளைப் படைத்தவர்களாக திகழ்ந்தனர். (பலரது பெயர்கள் தவறவிடப்பட்டிருக்கலாம்).

இங்கு ஒருசில மூத்த உறுப்பினரையும் குறிப்பிடலாம்.

திரு. சி. குமரகுரு (வைரப்பா)
திரு. சி. தங்கவேல்
திரு. சா. சாம்பசிவம்
திரு. ந. குணரத்தினம் (பாங்கரின் தமையன்)
திரு. செ. நவரத்தினசாமி
திரு. சி. இராசலிங்கம்
பொ.ஸ்ரீஸ்கந்தராசா
செ.பரஞ்சோதி (நாடகக்கலைஞரும் கலாபூஸணமும்)
கி.இராஜசிங்கம் (சித்திரக்கலைஞன் திரு.ஜெயசீலன் (ஜெகன்) இன் தந்தை)
சி.பஞ்சலிங்கம் (தற்சமயம் மட்டக்களப்பில் வசிப்பவர்)

ந.வடிவேல் (தற்சமயம் டென்மார்க்கில் வசிப்பவர் (இராசகிளி))
நா. மயோன் ராசா
ஒப்பின் செல்லையா
செ.பரமகுரு (குளறிக்குட்டி)
சி.செல்வரத்தினம் (இந்திரம்)
சி. குணபால்
கி.குணரத்தினம்
பொ. இரத்தினசிங்கம்
பொட்டான்
பொ.மகேசு (குட்டிராசா)
இ.நவரத்தினம் (குணம்)
அ.அதிரூபஆத்மலிங்கம் (இராமச்சந்திரன்)
ஐ.நித்தியானந்தம் (இராசகிளி)
இராசா - சிவசுந்தரம் (செல்லச்சாமி - சேமன்)
இராசா - சோதிலிங்கம்

சு.சேதுலிங்கம் (தலைவர்)
ந.பூலோகராசா (தங்கவேல்)
ந.சுந்தரலிங்கம் (பொட்டான்)
சி.தர்மகுலராசா (அமரர்)
க.இராசேந்திரம் (உடுக்குராசா அண்ணாவியர்)
ச.துரைசாமி (வெள்ளை மாமா)
ச.விஜயரத்தினம்

இடைக்காலத்தில் பங்களிப்புச் செய்தவர்களுள் கீழ்வரும் சிலரையும் பேட்டி தந்தவராகிய நவம் குறிப்பிட்டுள்ளார்.

1. ந. அரியரட்ணம் (அரியம் மாஸ்டர்)
2. து. கணேசரத்தினம்
3. நா. தர்மராசா (தறுமு)
4. இ. புஸ்பராசா (ஆனந்தி)
5. சா. ஞானசிவம்
6. த. கந்தசாமித்தரை (அருள்)

குறிப்பு – ஆரம்பத்தில் நிறங்களை அடிப்படையாகக் கொண்டு மூன்று (03) இல்லங்களாக செயற்பட்டு விளையாட்டுக் கழகம் நடைபெற்றுள்ளது. அவையாவன பச்சை, சிவப்பு, நீலம் என்பன. ஆரம்பகால இல்லத்தலைவர்களாக செயற்பட்டவர்களுள் பின்வருவோரைக் குறிப்பிடலாம்.

1. இராசா சேதுலிங்கம்
2. முத்து சிவசுந்தரம்
3. பொன்னுத்துரை தனபாலசிங்கம்.



ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகர்த்தாக்களுள் ஒருவரான திரு.சரவணமுத்து தர்மலிங்கம் (இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்). இவர் முதன் முதலில் **Caption** ஆக இருந்தவர்.



இவரும் ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் ஆரம்ப கர்த்தாக்களுள் ஒருவரான திரு. பொன்னுத்துரை தனபாலசிங்கம் ஆவார். (இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.) முதல் முதலில் ஊயிவயைெ ஆக திரு சரவணமுத்து தர்மலிங்கம் அவர்களுடன் இணைந்து விளையாடடுப் போட்டிகளை நடத்தியவராவார்.

..................

மேற்படி ஆக்கத்தினை தொகுத்த காலம் செப்ரம்பர் 2018 ஆகும்.

தொகுத்தவர் - Banker நடராஜா சிவரட்ணம் (ஆதிகோவிலடி ஜெயம்)

உதவியாளர் - செல்வி சுவன்யா சிறிதர் (ஸ்ரீமுருகன் குடியேற்றம்.)

தொகுப்பாளரின் முக்கிய குறிப்பு – மேற்படி ஆக்கத்தினை ஒரு பூரணமானதாகவோ அன்றி சரியான தரவுகள் உள்ளதாகவோ வாசகர்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

ஒரு வருட காலத்திற்கு மேலாக பல முயற்சிகள் செய்தும் ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தினரிடமிருந்தோ அன்றி பொதுமக்களிடமிருந்தோ சரியான ஒத்துழைப்பு கிடைக்காமையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட, தகவல்களில் மட்டுமிருந்தே இவ் ஆக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே இக்கட்டுரையை வாசித்த பின்னர் ஆர்வமுள்ள நேயர்கள் தமக்கு தெரிந்த தகவல்களை, திருத்தப்பட வேண்டிய விடயங்களை மற்றும் சேர்க்கப்பட வேண்டிய விடயங்களை கட்டுரையாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி விடயங்கள் கிடைக்கும் பட்சத்தில் அத்தகவல்களையும் உட்புகுத்த வாய்ப்புக்கள் உண்டு.

தொடர்புகளுக்கு தொ.இல- 0766463289

மின்னஞ்சல் - Valvaijeyam@gmail.com

**நன்றி**